தேதி: 05.01.2023

அ.வ.எண். 76 / 2015

வா.சா.1 ராமசாமி

3, 6 முதல் 8, 12 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி

1. காலை எண்.172/1ஏ மொத்தம் எவ்வளவு பூமி என்றால் 1.32 ஏக்கர் ஆகும். நான் என்னுடைய வழக்குரையில் க.ச.172/1ஏ -ல் 1.32 ஏக்கர் என்றும் மேலும் அதே காலையில் 0.20 1/2 ஏக்கர் என்றும் 2 முறை சொத்து விபரத்தில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். வா.சா.ஆ-5 ஆவணத்தில் 1 .37 ஏக்கர் கிரையம் பெற்றதாக உள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.7 ஆவணத்தில் காலை 172/1ஏ ல் 20 1/2 செண்ட் கிரையம் வாங்கியதாக உள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.5, 7 ஆவணத்தில் உள்ள சொத்தில் முரண்பாடு உள்ளது என்றால் சரியல்ல.

2. வா.சா.ஆ-8 ஆவணத்தில் பட்டா எண்.1660 ஐ தவிர மற்ற பட்டாவில் கூட்டுரிமையாளராக மற்றவர்களின் பெயர்கள் உள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.8 ஆவணத்தில் என்னுடைய பெயரை தனித்து உரிமையாளர் என்பதை காண்பிக்க நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரியல்ல. நீதிமன்ற ஆணையர் அறிக்கை மற்றும் வரைபடத்தை நான் பார்த்தேனா என்று கேட்டால் அறிக்கையை படித்துப்பார்த்தேன் வரைபடத்தை பார்க்கவில்லை. ஆணையர் வரைபடத்தில் உள்ள விஸ்தீரணமும் நான் வழக்கில் குறிப்பிட்டுள்ள சொத்தின் விஸ்தீரணமும் ஒன்றாகத்தான் உள்ளதா என்றால் ஒன்றாகத்தான் உள்ளது.

3. காலை 174/5 ல் 0.67 ஏக்கரும், அதே காலையில் 1.26 ஏக்கரில் 0.81 ஏக்கரும் வழக்குரையில் சொத்துவிபரத்தில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். ஆணையர் வரைபடத்தில் 67 செண்ட் மட்டும் காலை 174/5 ல் உள்ளதாக குறிப்பிட்டுள்ளார் என்றால் அது பற்றி ஞாபகமில்லை. முத்துசாமி கவுண்டர் வாரிசுகளிடமிருந்து பூமி வாங்கியுள்ளேன் அவர்களை இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான். முத்துசாமி கவுண்டர் வாரிசுகளிடமிருந்து

அவர்களுக்கு பாத்தியப்பட்ட பூமியை விட அதிக பரப்பு கொண்ட பூமியை வாங்கியுள்ளேன் என்று சொன்னால் அது பற்றி ஞாபகமில்லை.

4. நான் மேற்படி அதிக பூமி வாங்கியுள்ளதால் தான் அதற்கான மூல ஆவணங்களை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. ஆணையர் வரைபடத்தில் குறிப்பிட்டுள்ள பரப்பளவிற்கும் நான் வழக்கில் குறிப்பிட்டுள்ள சொத்தின் பரப்பளவிற்கும் நிறைய வேறுபாடு உள்ளது என்றும் என்னுடைய ஆவணங்களே நான் கோரியுள்ள பரிகாரத்திற்கு எதிராக உள்ளது என்று சொன்னால் சரியல்ல.

5. நான் தவறான ஆவணங்களின் அடிப்படையில் தவறான விஸ்தீரண பூமிகளை வாங்கிவிட்டு இந்த பிரதிவாதிகள் மீது பொய் வழக்கு போட்டுள்ளேன் என்றால் சரியல்ல. காலை 172 ல் 1.27 ஏக்கர் பூமியை மட்டும்தான் கிரையம் கொடுத்துள்ளார்கள் என்றும் மீதியை 1 முதல் 5 பிரதிவாதிகள் சொந்தமாக வைத்துக்கொண்டுள்ளார்கள் என்றால் சரிதான்.

6. 1 முதல் 5 பிரதிவாதிகளுக்கு காலை 172 ல் 1.66 1/2 - ல் 1.27 ஏக்கர் தான் கிரையம் கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான். காலை எண்.174 ல் 1.04 ஏக்கரில் 0.81 ஏக்கர் பூமியைத்தான் கிரையம் கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான். நான் அதிகப்படியான எனக்கு பாத்தியமில்லாத பிரதிவாதிகளின் சொத்துக்களின் மீது விளம்புகை பரிகாரம் கோரியுள்ளேன் என்றால் சரியல்ல. தாவா சொத்துக்களில் குறிப்பிடப்பட்டுள்ள ஒவ்வொரு சொத்துக்கும் தற்போது அத்து காட்ட முடியுமா என்று கேட்டால் அளந்து பார்த்தால் தான் தெரியும். வெறும் கண்ணால் பார்த்தால் அத்து தெரியாது.

7. நான் உழவு ஓட்டி இருப்பதாக சொல்வது தவறு என்றும், அது தரிசு நிலம் என்றும் நீதிமன்ற ஆணையர் தன்னுடைய அறிக்கையில் அதனை குறிப்பிட்டுள்ளார் என்றால் சரியல்ல. ஆணையர் அறிக்கைக்கு ஆட்சேபனை ஏதும் தெரிவித்தேனா என்று கேட்டால் இல்லை.

8. மூல ஆவணங்களை தாக்கல் செய்யாததாலும் தவறான சொத்து விவரத்தை குறிப்பிட்டுள்ளதாலும் நான் கேட்டுள்ள விளம்புகை பரிகாரம் எனக்கு கிடைக்காது என்றால சரியல்ல. நான் வழக்குரையில் கோரியுள்ளவாறு வருவாய் ஆவணங்கள் எதுவும் தனித்து தாக்கல ் செய்யாததால் நான் கேட்டுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்குக்கூடியது அல்ல என்றால் சரியல்ல. மேற்கண்ட பிரதிவாதிகளுக்கு எதிராக இந்த வழக்கு தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

சாட்சி விசாரணை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைகள் திருத்தப்பட்டு சரிபார்க்கப்பட்டது. சாட்சியிடம் கொடுத்து அவர் படித்து பார்த்து சரியென கையெழுத்து செய்தார்.

**ஒப்பம்./- எஸ். வடிவேல்.,**

மாவட்ட உரிமையியல் நீதிபதி (FAC)

பல்லடம்.